# கடற்கரை கவியரங்கு எண் - 623

நாள் **05-03-2023**



# மனம் தெளிவோம்!

தென்றலுக்குத் தூதுவிட்டுத் தேன்மதுரச் சொல்லெடுத்து,
மன்றிலில் ஆடிவிட மனமுழுதும் குதூகலித்து,
அன்றலர்ந்த மலரைப்போல் அழகாக முகமெழுதி,
ஒன்றிலும் வழுவாத ஒய்வறியாச் சிந்தை கொண்டு,

கன்றாய் மனம் பூண்டு காராம்பசுவின் மடிதேடி,
என்றும் நிலையாத இகவாழ்வில் உளம் நெகிழ்ந்து,
நன்றாய் நான் செய்வேன் நானிலத்துப் பெருமையுடன்,
என்றெனவாய் பலவும்கூறி, இகவாழ்வில் மகிழ்ந்தாலும்,

தென்றலாய்த் திகழ்ந்தாலும் தெய்வீகம் அறிந்தாலும்,
மன்றத்தில் ஆட்டமும் ஓர்நாள் முடிவெய்து மன்றோ!
வென்று வாழ்ந்தாலும் வீரத்தில் நிறைந்தாலும்,
என்றும் நிலையாதே இகவாழ்வு எவ்வுயிர்க்கும்!

அன்பே உறவென்றும் அறிதலே செயலென்றும்,
முன்னம் பலர்வந்து, முடிவுரையின் நிலைச்சொல்லி,
என்றும் நிலையாதே எனச் சொன்னாலும் மனம்,
தன்னிலையை உணராது, தன்வழியில் சென்றிடவும்,

தன்னிறைவை அடையமனம் தளமமைத்துப் போராடும்!
தன்னிலை என்னவென்று யார்தான் அறிந்திடுவார்?
அன்பை விதைத்திடுவோம்; அனைவரையும் அணைத்திடுவோம்!
இன்னமும் சிலகதைகள் ஏதேதோ சொல்வதுண்டு!

சொன்னவை புறம் வைத்து, மண்ணுயிர் யாவையும்,
தன்னிலைக் கொண்டு வாழ தடம் அமைத்து,
மன்னிய வாழ்வியலின் மன்னுதலை மனமேற்றி,
மன்றில் ஆடினாலும் மகிழ்வுடன் நிறைந்திடுவோம்!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்,**
05-03-2023 ( மதியம் 12.25)

